**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 569/2025** |
| **Ranking of witness** | **:** | **PW5** |
| **Name** | **:** | **பழனியப்பன்** |
| **Father's Name** | **:** | **த/பெ சண்முகம்** |
| **Age** | **:** | **45** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25-02-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது நாகலம்மன்கோம்பை கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்த கார்த்திக் என்னுடைய இளைய மகன். கடந்த 15.06.2025ஆம் தேதி நான் தோட்டத்தில் இருந்தபோது எனது மகன் கார்த்திக் காலை 09.30 மணியளவில் வேலைக்கு செல்ல இருசக்கர வாகனத்தில் கிளம்பினார். சுமார் 10.30 மணியளவில் பசுபதி என்பவர் என்னிடம், என் மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக என்னிடம் சொன்னார். நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது, என் மகன் கார்த்திக் தலை, தாடை ஆகிய இடங்களில் காயம்பட்டு, சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டிருந்தார். அவரை ஆம்புலன்ஸ்சில் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இந்த சம்பவம் குறித்து எனது மனைவி ஐயம்மாள் புகார் கொடுத்தார். போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவம் குறித்து கேள்விப்பட்டுத்தான் சம்பவ இடத்திற்கு சென்றேன்.

**மறுவிசாரணை** : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.02.25 17:00:21 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**தருமபுரி.**

**சாட்சியின் கையொப்பம்.**

<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**</u>

<u>**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**</u>

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 569/2025** |
| **Ranking of witness** | **:** | **PW6** |
| **Name** | **:** | **நேரு** |
| **Father's Name** | **:** | **த/பெ ராமகிருஷ்ணன்** |
| **Age** | **:** | **43** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25-02-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

__முதல் விசாரணை :__

நான் தற்போது நாகலம்மன்கோம்பை கிராமத்தில் வசித்து வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 19.06.2025 தேதியன்று, நான் தருமபுரி செல்வதற்காக சென்றபோது, மதியம் சுமார் 12.00 மணிக்கு, கோம்பையில் இருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் உள்ள ஆஞ்சநேயர் கோவில் அருகே போலீசார் அந்த இடத்தில் நடந்த விபத்து சம்பந்தமாக சாலையில் அளவுகள் எடுத்து, குறியீடு செய்து விசாரணை செய்தார்கள். நான் அப்போது அவர்களுடன் இருந்தேன். பின்பு மாதிரி வரைபடம் வரைந்து ஒரு தாளில் எழுதினார்கள். அதை நான் படித்து பார்த்தேன். அதில் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பார்வை மகஜரில் 2வது கையொப்பம் ரங்கநாதன் என்பவருடையதாகும். போலீசார் விசாரித்தார்கள்.

__எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை__ :

நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில்தான் கையொப்பம் இட்டேன். நான் கூறுவது தவறு என்றும், சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யாமல், காவல் நிலையத்தில் கையொப்பம் இட்டுவிட்டு, அடிப்பட்டவர் எனக்கு தெரிந்தவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

__மறுவிசாரணை__ : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.02.25 17:00:34 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**

**சாட்சியின் கையொப்பம்.** **தருமபுரி.**

**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 569/2025** |
| **Ranking of witness** | **:** | **PW7** |
| **Name** | **:** | **ரங்கநாதன்** |
| **Father's Name** | **:** | **த/பெ வேடியப்பன்** |
| **Age** | **:** | **44** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25-02-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது நாகலம்மன்கோம்பை கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 19.06.2025 தேதியன்று, நான் தருமபுரி செல்வதற்காக சென்றபோது, மதியம் சுமார் 12.00 மணியளவில், பெரிய ஆஞ்சநேயர் கோவில் அருகே வந்தபோது, போலீசார் அந்த இடத்தில் வரைபடம் வரைந்து, விசாரணை செய்தார்கள். பின்பு என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சி கையொப்பம் இட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது. என்னுடன் நேரு என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டார். போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில்தான் கையொப்பம் இட்டேன். நான் கூறுவது தவறு என்றும், சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யாமல், காவல் நிலையத்தில் கையொப்பம் இட்டுவிட்டு, அடிப்பட்டவர் எனக்கு தெரிந்தவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.02.25 17:00:44 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**

**சாட்சியின் கையொப்பம்.**

**தருமபுரி.**